


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், 28-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, இருசக்கர வாகன பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிர்புறத்திலிருந்து இன்று (18.01.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார். நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 42/2017 நாள்: 18.01.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள், 28-வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு, இருசக்கர வாகன பேரணியை இன்று (18.01.2017) கொடியசைத்து, துவக்கி வைத்தார்.**

தமிழக அரசு, போக்குவரத்து துறையின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவும், சாலை பாதுகாப்பு விதிமுறைகளை கடைபிடிப்பதற்காகவும் சாலை பாதுகாப்பு வாரவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் 28-வது சாலை பாதுகாப்பு வாரவிழா, ஜனவரி 17 முதல் 23-ம் தேதி வரை கொண்டாடப்படுகிறது. இதில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய போக்குவரத்து விதிமுறைகள் குறித்தும், நான்கு சக்கர வாகனங்களில் பயணம் செய்யும் போது ஷீட் பெல்ட் அணிவதால் ஏற்படும் பாதுகாப்பு குறித்தும் ஆகியவற்றால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள், போக்குவரத்து துறையின் சார்பாக இன்று (18.01.2017) நடைபெற்ற இருசக்கர வாகன பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிர்புறத்திலிருந்து கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த வாகன பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிர்புறத்திலிருந்து துவங்கி, பார்வதிபுரம் வழியாக நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்திற்கு சென்று நிறைவு பெறுகிறது. இதில் சுமார் 100-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகன ஓட்டுநர்கள் தலை கவசம் (ஹெல்மெட்) அணிந்து கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திரு.ரஜினிகாந்த், திரு.முருகன், வட்டார போக்குவரத்து ஆய்வாளர் திரு. வி. ஆனந்த், திரு. செல்லம், திரு. தங்கராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.